(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.73/2014 |
| Deposition Of Witness for | : | PW4 |
| Name | : | **Sampath** |
| Father's/Husband's Name | : | Shanmugavelu |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27th December 2023.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை</u>** :

1. நான் கடந்த ஏப்ரல் 2017 ல் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் அலுவலகம் சென்னையில் புள்ளியியல் அலுவலராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று விட்டேன். 2011 ல் சிவகங்கை

துணை இயக்குநர் சுகாதார பணிகள் அலுவலகத்தில் பணிபுரிந்த போது 09.11.2011 ம் தேதி நான் துணை இயக்குநரின் அறிவுரையின் பேரில் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு பிற்பகல் 1.30 மணிக்கு சென்றேன்.

2. அங்கு காவல் ஆய்வாளர் திரு. இராஜா அவர்களை சந்தித்தேன். அங்கு ஏற்கனவே திரு. கோபால் என்கின்ற கண்காணிப்பாளர் மாவட்ட கருவூல அலுவகத்திலிருந்து வந்திருந்தார் . எங்களை ஆய்வாளர் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைத்தார். ஒரு வழக்கிற்காக அரசு தரப்பு சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். மற்றொரு அறையிலிருந்து திரு. முருகசாமி என்பவர் (வாதி) அவர்களை எங்கள் இருவரிடமும் அறிமுகப்படுத்தி என்ன காரணத்திற்காக அழைக்கப்பட்டுள்ளோம் என்பதையும் ஆய்வாளர் தெரிவித்தார்.

3. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல் எங்களிடம் கொடுத்து படித்துப்பார்க்கும்படி ஆய்வாளர் சொன்னார். மேலும் அது சம்பந்தமாக வாதியிடம் கேட்டு உறுதிபடுத்தி கொள்ள கூறினார். நாங்களும் படித்துவிட்டு அவரிடம் கேட்டுக் கொண்டு உறுதி படுத்திக் கொண்டோம். கீழடி மின்வாரிய உதவி பொறியாளர் மின்சாரம் அவர்களிடம் பணம்

கொடுக்க வந்திருப்பதாக சொன்னார். வாதி திரு. முருகசாமி ஒரு ஆலை கட்ட இருந்ததாகவும் அதற்கு மின் இணைப்பு வழங்க உதவி பொறியாளர் ரூ.10000/- லஞ்சம் கேட்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆய்வாளர் வாதியிடம் பணம் கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டு அதனை ஆஜர்படுத்தும்படி சொன்னார்.

4. வாதி ஒப்படைத்த பணம் ரூ.10000/- (8 ஆயிரம் ரூபாய் தாள், 4 ஐநூறு ரூபாய் தாள் ) இருந்தது. என்னிடம் காட்டப்படும். சா.பொ.1 தான் அந்த பணம் ஆகும். அந்த பணத்தின் எண்களை ஆய்வாளர் ஒப்படைப்பு மகஜரில் குறித்துக் கொண்டார். மேலும் அந்த பணத்தை என்னிடம் கொடுத்து எண்ண சொன்னார். நான் எண்ணிப்பார்த்தேன். அப்போது தலைமைக் காவலர் திரு. சிவகுமார் அவர்களிடம் ஆய்வாளர் 2 கண்ணாடி டம்ளர்களை எடுத்து அதில் நீர் ஊற்றி சோடியம் கார்பனேட் கரைசலை தயார் செய்ய சொன்னார்.

5. அந்த கரைசலில் பணத்தை எண்ணிய எனது கை விரல்களை நனைக்கச் சொன்னார். அந்த கரைசலில் மாற்றம் எதுவும் இல்லை. பிறகு அந்த பணத்தின் இரு புறமும் தலைமைக்காவலரிடம் சொல்லி பினாப்தலீன் பவுடரை தடவச் சொன்னார். அதன்பிறகு அவ்வாறு பவுடர்

தடவப்பட்ட பணத்தை என்னை எண்ணச் சொன்னார். எண்ணிய பிறகு என்னுடைய இரு கைகளின் விரல்களையும் சோடியம் கார்பனேட் கரைசலில் நனைக்கச் சொன்னார். அப்போது அந்த கரைசல் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது.

6. சாட்சிகளான எங்களுக்கும் வாதிக்கும் நடவடிக்கையின் முக்கியத்துவம் புரிவதற்காக மேற்படி செயல் செய்து காண்பிக்கப்பட்டது. ஆய்வாளர் வாதியிடம் லஞ்சப் பணம் ரூ.10000/- ஐ எடுத்துக் கொண்டு கீழடி சென்று உதவி பொறியாளரை சந்திக்கும்படியும் அப்போது அவர் பணம் கேட்டால் கொடுத்துவிட்டு வெளியே வரும்போது தலையை 3 முறை சீவுமாறு தெரிவித்தார். வாதியுடன் திரு. கோபால் என்ற அரசு சாட்சியை உடன் செல்லச் சொன்னார். உடன் சென்று அங்கு நடக்கும் நிகழ்வுகளை கண்டு வந்து சொல்லும்படி சொன்னார். அதன்பிறகு கரைசலை கீழே கொட்டி விட்டு கைகளை நன்றாக கழுவி விட்டு பினாப்தலீன் பவுடரை அலுவலத்தில் வைத்து விட்டு தலைமைக் காவலர் சிவகுமாரை அலுவலகத்தில் இருக்கும்படி ஆய்வாளர் சொன்னார்.

7. நான் பணம் ரூ.10000/- ஐ வாதியின் பேண்ட் பின் பாக்கெட்டில் ஒன்றும் இல்லை என்று உறுதிபடுத்திக் கொண்டு உள்ளே வைத்தேன்.

அதன்பிறகு நாங்களும் வாதி மற்றும் போலீசார் சகிதம் அரசு வாகனத்தில் செல்ல முடிவு செய்தோம். அப்போது வாதி அவர்கள் உதவி பொறியாளர் செல்வனை தொலைபேசியில் அழைத்துவிட்டு வர வேண்டும் என்று சொன்னதன் அடிப்படையில் வாதியை எதிரிக்கு தொடர்பு கொள்ளும்படி ஆய்வாளர் கூறினார். அப்போது மணி பிற்பகல் 2.15 இருக்கும். வாதி அனைவருக்கும் கேட்கும்படியாக ஸ்பீக்கரில் போட்டு எதிரிக்கு போன் செய்தார். எதிரி அழைப்பை எடுத்தார். பணம் கொண்டு வருகிறீர்களா என்று எதிரி வாதியிடம் கேட்டார். அதற்கு வாதி கொண்டு வருகிறேன் என்று சொன்னவுடன் நான் இப்போது மானாமதுரை AED அலுவலகத்தில் உள்ளேன் என்றும் மாலை 5.00 மணிக்கு பிறகு கீழடி அலுவலகம் வந்து என்னை வெளியே பார்த்து பேசிவிட்டு நான் சொல்லும் இடத்திற்கு வர வேண்டும் என்று சொன்னார். இதனிடையே பகல் 1.35 மணி முதல் 2.30 மணி வரை ஒப்படைப்பு மகஜர் தயார் செய்யப்பட்டது. அதில் நான், வாதி, மற்றொரு அரசு சாட்சி மற்றும் காவல் ஆய்வாளர் கையெழுத்து செய்தோம். அ.த.சா.ஆ.5 ஆக ஒப்படைப்பு மகஜர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. நாங்கள் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திலிருந்து கிளம்பும் போது

கண்ணாடி டம்ளர், சோடியம் கார்பனேட் பவுடர் மற்ற சில பொருட்கள் பையில் போட்டு எடுத்துச் சென்றோம் . 3.30 மணிக்கு புறப்பட்டு பூவந்தி வழியாக சிலைமான் என்ற இடத்திற்கு சென்று 4.30 மணியளவில் காத்திருந்தோம். சிறிது நேரம் கழித்து மாலை 5.15 மணியளவில் ஆய்வாளர் வாதியிடம் கூறி எதிரிக்கு போன் செய்யும்படி கூறினார். அதன் பேரில் வாதி எதிரியிடம் போனில் பேசிய போது நீங்கள் மதுரையில் தங்கியிருக்கும் அறைக்கு சென்று விட்டு ஒன்றரை மணிநேரம் கழித்து என்னை தொடர்பு கொள்ளுங்கள் என்று எதிரி கூறினார்.

9. சிலைமான் என்ற இடத்திலிருந்து கிளம்பி மதுரை–திருப்பரங்குன்றம் செல்லும் சாலையில் உள்ள போலீஸ் கிளப் ஹவுஸ் என்ற இடத்தில் 6.30 மணியளவில் நின்றோம். அதன்பிறகு அங்கிருந்து நாங்கள் அனைவரும் வாதி தங்கியிருந்த விஜய் ஹோட்டலில் அறை எண் 308 சென்று தங்கினோம். ஹோட்டலிலிருந்து வாதியை எதிரிக்கு போன் செய்ய சொன்ன போது வாதி பேசினார். அப்போது எதிரி நான் மதுரைக்கு வந்து நான் உங்களை அழைக்கிறேன் என்று சொன்னார்.

10. இரவு 7.17 மணிக்கு எதிரி வாதியின் அலைப்பேசிக்கு மிஸ்ட் கால் ஒன்று கொடுத்தார். அதனைத் தொடர்ந்து வாதி எதிரியை தொடர்பு

கொண்டபோது நான் மதுரைக்கு வந்துவிட்டேன் நீங்கள் தங்கியிருக்கும் லாட்ஜ்ஜின் பெயரை சொல்லும்படி கேட்டார். வாதியும் சொன்னார். 7.37 மணிக்கு வாதியின் செல்போனுக்கு எதிரி மீண்டும் பேசி தான் ேஹாட்டலின் கீழே இருப்பதாகவும் நீங்கள் எந்த அறையில் உள்ளீர் என்று வாதியிடம் கேட்டார். வாதியும் அறை எண் 308 என்று சொன்னார்.

11. அப்போது காவல் ஆய்வாளர் வாதியையும் அரசுசாட்சி கோபால் என்பவரையும் அறை எண் 308 ன் உள்ளே இருக்கும்படியும் அரசுசாட்சியிடம் அங்கு நடப்பதை கவனிக்கும்படியும் அறிவுறுத்தினார். நானும் ஆய்வாளரும் 4 வது மாடிக்கு செல்லும் வழியில் மறைந்து நின்று கொண்டோம். 7.45 மணியளவில் எதிரி 3 வது தளத்தில் அறை எண் 308 க்கு செல்வதற்காக நடந்து வந்தார். 7.50 க்கு அறை எண் 308 ஐ விட்டு ஆஜர் எதிரி உதவி பொறியாளர் முன்னார் நடந்து வருகிறார் அவருக்கு பின்னால் வாதி தலையை சீவிக் கொண்டு சைகை செய்து கொண்டு வருகிறார். வாதிக்கு பின்னால் அரசு சாட்சி கோபால் என்பவர் வந்தார். அப்போது காவல் ஆய்வாளர் வாதியை அணுகி பணம் வாங்கிவிட்டாரா என்று கேட்ட போது அவர் ஆமாம் என்றும் ஒரு வாரத்தில் வேலையை முடித்துத் தருவதாக ஆஜர் எதிரி சொன்னதாக

வாதி சொன்னார். அதனை காவல் ஆய்வாளர் அரசு சாட்சி மூலம் உறுதி செய்து கொண்டார்.

12. மெதுவாக நடந்து சென்ற ஆஜர் எதிரியின் முன்புறம் சென்று மறித்து நாங்கள் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவில் இருந்து வந்துள்ளதாக தெரிவித்தோம். எதிரியை அழைத்துக்கொண்டு மீண்டும் அறை எண் 308 க்கு சென்றோம். அப்போது ஆய்வாளர் வாதியைப் பார்த்து நீ அறைக்கு வெளியே இரு என்று சொன்னார். அப்போது ஆஜர் எதிரியை பார்த்த போது மிகவும் பதற்றத்துடன் இருந்தார். அவரை காவல் ஆய்வாளர் ஆசுவாசப்படுத்தி அமர வைத்தார். தலைமைக் காவலர் திரு. வெங்கடேசன் என்பவரை அழைத்து காலியான 2 கண்ணாடி டம்ளரில் சோடியம் கார்பனேட் கரைசலை தயாரிக்க சொன்னார். தயாரித்த பிறகு எதிரியின் 2 கைகளின் விரல்களை கரைசலில் நனைக்கச் சொன்னார். அப்போது கரைசல் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது.

13. எதிரியிடம் நீங்கள் வாதியிடம் பணம் வாங்கினீர்களா என்று கேட்டபோது ஆமாம் என்று சொல்லி அந்தபணத்தை எடுத்து ஆஜர் செய்தார். காவல் ஆய்வாளர் அந்த பணத்தை வாங்கிய பிறகு என்னிடம் கொடுத்து அந்த பணம் ஏற்கனவே ஒப்படைப்பு மகஜரில்

குறிப்பிடப்பட்டுள்ள பணத்தின் எண்ணுடன் ஒப்பிட்டுப்பார்க்கச் சொன்னார். நான் இரண்டும் ஒன்றாக இருப்பதாக சொன்னேன். அதே போன்று மற்றொரு அரசு சாட்சி கோபாலும் ஒப்பிட்டு பார்த்து சொன்னார்.

14. காவல் ஆய்வாளர் தான் கொண்டு வந்திருந்த வேஷ்டியை எதிரிக்கு மாற்று உடையாகக் கொடுத்து எதிரி அணிந்திருந்த பேண்டை கேட்டுப் பெற்றார். மற்றொரு டம்ளரில் சோடியம் கார்பனேட் கரைசல் கலந்து அதில் எதிரி லஞ்சப்பணத்தை வாங்கி பேண்ட்டின் பின் பாக்கெட்டில் வைத்திருந்த பகுதியை நனைத்தபோது அதுவும் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. அந்த பேண்ட் கருப்பு நிறத்தில் இருந்தது, அதில் Siyaram என்று குறிப்பிடப்பட்டிருந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ. 5 தான் அந்த பேண்ட் ஆகும்.

15. கரைசல்களை தனித்தனியாக 180 மி.லி அளவுள்ள பாட்டிலில் நிரப்பி அதனை நன்றாக மூடி துணியால் சுற்றி அதில் கயிற்றால் கட்டி லேபிள் தயாரித்து ஒட்டி அதில் நான், அரசு சாட்சி காவல் ஆய்வாளர், எதிரி ஆகியோர் கையெழுத்து இட்டு காவல் ஆய்வாளர் சீல் வைத்தார். சா.பொ.2 முதல் சா.பொ.4 வரையிலான பாட்டில்கள் தான் அப்போது தயாரிக்கப்பட்ட கரைசல்கள் ஆகும். அந்த பாட்டில்களில் இடது கைவிரல்களை நனைத்த

கரைசல்களுக்கு L என்றும் வலது கைவிரல்களை நனைத்த கரைசல்களுக்கு R என்றும் பேண்டின் பின்பகுதி பாக்கெட்டை நனைத்த கரைசல்களுக்கு P என்றும் குறிக்கப்பட்டது.

16. மேலும் காவல் ஆய்வாளர் எதிரியிடம் இருந்த லஞ்ச பணம் ரூ.10000/- ஐ கைப்பற்றிக் கொண்டார். மேலும் எதிரியை காவல் ஆய்வாளர் விசாரித்தபோது தன்னுடைய பெயர் மீனாட்சிசுந்தரம் என்றும், தான் இளநிலை பொறியாளர் Grade 1 ஆக பணிபுரிவதாகவும் சொன்னார். எதற்காக பணம் வாதியிடம் வாங்கினீர்கள் என்று கேட்டபோது அதற்கு எதிரி தான் தொழிலாளர்களுக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று வாங்கியதாக தெரிவித்தார். வாதிக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு ஒருவர் எதிர்ப்பு மனு கொடுத்துள்ளதாக தெரிவித்தார். உடனே காவல் ஆய்வாளர் வெளியே இருந்த வாதியை அழைத்து கீழடி மின் அலுவலகத்திலிருந்து கடிதம் எதுவும் பெற்றீர்களா என்று கேட்டார் அதற்கு வாதி இல்லை என்று கூறினார். மீண்டும் வாதியை வெளியே இருக்குமாறு ஆய்வாளர் சொன்னார்.

17. மீண்டும் எதிரியை காவல் ஆய்வாளர் சோதனை செய்த போது அவரது பாக்கெட்டில் ரூ. 310/- பணம் , அவரது கையில் 2 சிம் கார்டு

உள்ள செல்போன் இருந்தது. பணம் எதிரியின் சொந்த பணம் என்று சொன்னதால் ரூ.310/- யையும் அவரிடமே கொடுத்துவிட்டார். செல்போன் குறித்து எனக்கு ஞாபகமில்லை. எதிரி கையில் சின்ன கைப்பை வைத்திருந்தார். அதனைக் காவல் ஆய்வாளர் சோதனை செய்தார். அதில் 4 ஆவணங்கள் இருந்தது. அதனையும் காவல் ஆய்வாளர் கைப்பற்றிக் கொண்டார்.

18. இரவு 8.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை அவ்வப்போது காவல் ஆய்வாளரால் மகஜர் தயார் செய்யப்பட்டது. இரவு 10.00 மணியளவில் எதிரியிடம் உங்களை கைது செய்வதாக காவல் ஆய்வாளர் தெரிவித்தார். கைது தொடர்பாக எதியின் வீட்டிற்கும், திருப்புவனம் AED மற்றும் மானாமதுரை EE க்கும் காவல் ஆய்வாளர் தகவல் சொன்னார். எதிரியின் வீட்டிற்கு சோதனை செய்வதற்கு முன்பு அது தொடர்பான தகவல்களை ஆவணமாக நீதிமன்றத்திற்கு தகவல் அனுப்பி விட்டு எதிரியின் வீட்டிற்கு இரவு 11.30 மணிக்கு சென்று 11.45 மணி வரை சோதனை செய்து எதிரியின் வீட்டிலிருந்து எதுவும் கைப்பற்றப்படவில்லை. அப்போது தயார்செய்யப்பட்ட சோதனை சாபிதாவில் எதிரியின் மகள் சந்திரலேகாவிடம் கையெழுத்து பெறப்பட்டது.

அதில் சாட்சிகளும் கையொப்பம் செய்தோம். அ.த.சா.ஆ.13 தான் அந்த சோதனை சாபிதா ஆகும்.

19. அதன் பிறகு எதிரியின் அலுவலகமான கீழடி சென்று அங்கு களப்பணியாளர் வாழவந்தான் முன்னிலையில் வருகைப்பதிவேடு, மனுபதிவேடு, Job Allocation Register, பொருள் கொள்முதல் பதிவேடு ஆகியவையும் மேலும் வாதியின் கோப்பு, வாதிக்கு பொருள் வாங்கியதற்கான கோப்பு மற்றும் எதிர்ப்பு மனு ஆகியவை அடங்கிய 3 கோப்புகள் உள்ளிட்ட 7 ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. இதுதொடர்பாக நள்ளிரவு 1.00 முதல் 1.45 மணி வரை(10.11.2011) மகஜர் தயாரிக்கப்பட்டது அதில் சாட்சிகளாக நான் உள்ளிட்டவர்கள் கையெழுத்து செய்தோம். அந்த மகஜரில் களப்பணியாளர் திரு.வாழவந்தான் அவர்களும் கையெழுத்து இட்டார். ஏற்கனவே எதிரியை விஜய் ேஹாட்டலில் வைத்து பொறிவைப்பு நடவடிக்கையில் கைது செய்யப்பட்டபோது தயார் செய்யப்பட்ட மகஜரில் கடைசி பக்கத்தில் அந்த ேஹாட்டலின் மேலாளர் சண்முகம் என்பவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

20. நள்ளிரவு 2.45 மணிக்கு மீண்டும் சிவகங்கை ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து சேர்ந்தோம். இது தொடர்பாக புலன் விசாரணை அதிகாரி விசாரித்தார்.

**<u>குறுக்குவிசாரணை</u> : வாய்ப்பளித்தும் இல்லை.**

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Location: Sivagangai
Date: 2023.12.27 18:22:31 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.